32633

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**43 T I**

| வினாத்தாள் | புள்ளிகள் |
| --- | --- |
| I | |
| பரீட்சகர் 1 | |
| பரீட்சகர் 2 | |
| EMF | |

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023 (2024)

චිත්‍ර I
சித்திரம் I
Art I

පැය එකයි
ஒரு மணித்தியாலம்
*One hour*

※ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.

சுட்டெண் :……………………………………

● கீழே தரப்பட்டுள்ள ஒளிப்படத்தைப் பயன்படுத்தி **1** தொடக்கம் **5** வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.



**1.** இக் கட்டடக்கலை நிர்மாணம் ……………………………………… எனும் பெயரால் அழைக்கப்படுகின்றது.

**2.** இக் கட்டடம் அழகிய ……………………………………………………… மீது அமைக்கப்பட்டுள்ளது.

**3.** இது ……………………………………… கட்டடக்கலை நிர்மாணப் பண்புகளுக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளது.

**4.** இக் கட்டடம் மண்டபம், ……………………………………… மற்றும் கர்ப்பக்கிரகம் ஆகிய பகுதிகளை உடையது.

**5.** இக் கட்டடத்தின் மேற்பகுதி மூன்று அடுக்குகளைக் கொண்டுள்ளதுடன், அதன் உச்சி எண்கோண ……………………………… அமைப்பினால் சூழப்பட்டுள்ளது.

● **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

**6.** பாரம்பரிய மட்பாண்ட கைத்தொழிலையொட்டி பயன்படுத்தப்பட்ட இலங்கையின் புராதன தொழில்நுட்ப உபகரணம் யாது?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

**7.** தும்பறை பாய்க் கைத்தொழிலில் கலப்பு அலங்காரங்களுடனான பாய் எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

[பக் 2 ஐப் பார்க்க

**8.** பேராசிரியர் பரணவிதான அவர்களின் 'அக்கினியும் வருணபகவானும்' என அழைக்கப்படும் செதுக்கலில் மனித உருவம் அமர்ந்திருக்கும் மெய்ந்நிலை எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?

.............................................................................................................................

**9.** ஐரோப்பிய சிற்பக் கலைஞரான ஹென்றி மூர் அளவில் பெரிய அருப மானிட உருவங்களை உருவாக்கும்போது பின்பற்றிய தனித்துவமான விசேட பண்பு யாது?

.............................................................................................................................

**10.** தொடர்புசாதன ஊடகமாக நிகழ்வுகள் மற்றும் பாத்திரங்களை, நகைச்சுவையாகவும் மிகைப்படுத்தியும் காட்டி வரையப்படும் விசேட சித்திர வகை எப்பெயரினால் அழைக்கப்படுகின்றது?

.............................................................................................................................

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன்கீழ் கோடிடுக.**

**11.** காவற்கல் நிர்மாணிப்பின் ஆரம்ப நோக்கம்,
(1) வெளிப்புற அலங்காரப் பகுதியொன்றாகக் காட்டுவதாகும்.
(2) கைப்பிடிச் சுவரிற்கு ஆதாரமாகப் பயன்படுத்துவதாகும்.
(3) கம்பீரமானதும் ஆஜானுபாகுவானதுமான சிற்பமாகக் காட்டுவதாகும்.
(4) குறிப்பிட்ட இடத்திற்கான பாதுகாப்பை வழங்குவதாகும்.

**12.** றாபாயெல் சன்சியோ கலைஞனின் "எதென்ஸ் பள்ளி" எனும் ஓவியம் காணப்படுவது,
(1) ஸ்டென்ஸாடெலா சிக்னாசுரா எனும் கட்டடத்தில் ஆகும்.
(2) சிஸ்டெயின் இறைமனையிலாகும்.
(3) இலண்டன் தேசிய கலையகத்திலாகும்.
(4) லூவர் அருங்காட்சியகத்திலாகும்.

**13.** தூபாராம தூபியின் பாதுகாப்பிற்காக வட்டதாகேயை அமைத்த அரசன்
(1) தேவநம்பிய திஸ்ஸன் (2) மகாசென்
(3) வாலகம்பா (4) லஜ்ஜதிஸ்ஸ

**14.** கலாநிதி ஆனந்த குமாரசுவாமியின் கருத்திற்கமைய சீகிரியா ஓவியங்களில் சித்தரிக்கப்படுவோர்
(1) தேவ கன்னியர்கள் (அப்சரா) ஆவர்.
(2) அரசிமார் மற்றும் பணிப்பெண்கள் ஆவர்.
(3) மேகலதா (மேகம்) மற்றும் விஜ்ஜுலதா (மின்னல்) ஆவர்.
(4) அந்தப்புரப் பெண்கள் ஆவர்.

**15.** பௌத்த விகாரை ஓவிய நிர்மாணங்களில் இந்திய அஜந்தா, அல்லோரா, பாக் போன்ற இடங்களிலுள்ள கலைப் படைப்புகளின் செல்வாக்கைப் பெற்ற இலங்கை ஓவியக் கலைஞன்
(1) எம். சார்ளிஸ் (2) சோலியஸ் மெண்டிஸ்
(3) ஜோர்ஜ் கீற் (4) எல். டீ.பீ. மஞ்சு ஶ்ரீ

● **16** தொடக்கம் **20** வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லினதும் கருத்தை விளக்கும் வகையில் முழுமையான ஒரு வாக்கியம் வீதம் எழுதுக.

**16.** ஸ்தபதிராயர் : .............................................................................................
.............................................................................................

**17.** யூபய / யஷ்டிய : .............................................................................................
.............................................................................................

**18.** கறைபடிந்த கண்ணாடி : .............................................................................................
.............................................................................................

**19.** பக்கத்தோற்ற உருவங்கள் : .............................................................................................
.............................................................................................

**20.** அல்டமீரா : .............................................................................................
.............................................................................................

[பக் 3 ஐப் பார்க்க

- **21** தொடக்கம் **25** வரையில் தரப்பட்டுள்ள ஒளிப்படப் பகுதிகளுடனான நெருங்கிய தொடர்பைக் காட்டும் உருவை, எதிரிலுள்ள **A, B, C, D, E** ஆகிய உருக்களிலிருந்து தெரிவுசெய்து, அதனைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தினைப் **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

**21.** 

(.........)



A

**22.** 

(.........)



B

**23.** 

(.........)



C

**24.** 

(.........)



D

**25.** 

(.........)



E

- **26** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான **சொல்லை / சொற்களை** இட்டு வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

**26.** கண்டிக் கால தாழ்நாட்டுப் பிரதேச கலைப் பண்புகளுடனான ஓவியங்களில் சுத்தசோம ஜாதகக் கதையில் வரும் 'அரண்மனையில் மாதர்கள்' எனும் ஓவியம் .............................................. விகாரையில் காணப்படுகின்றது.

**27.** ஓவியக் கலைஞர் டேவிட் பேன்ரரால் கண்டி திரித்துவ தேவாலயத்தில் வரையப்பட்டிருக்கும் ஓவியமானது ஐரோப்பிய .............................................. கலைச் செல்வாக்கைப் பெற்றுள்ளது.

**28.** கலைஞர் பப்லோ பிக்காசோ 'குவார்னிக்கா' ஓவிய நிர்மாணிப்பின்போது வரையறுக்கப்பட்ட நிறங்களான நரை, வெள்ளை, கறுப்பு நிறங்களை மட்டும் பயன்படுத்தி .............................. சாயலில் கட்டியெழுப்பியுள்ளார்.

**29.** அநுராதபுர காலத்துக்குரிய .............................................. பௌத்த விகாரையான போதிலும் லௌகீக கருப்பொருட்களுடனான கற்செதுக்கல்கள் காணப்படுகின்றன.

**30.** யாழ்ப்பாண இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவிலில் காணப்படும் 'அகத்தியரும் விநாயகரும்' எனும் ஓவியம் .............................................. கலைஞனின் ஓவியமாகும்.

[பக் 4 ஐப் பார்க்க

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

- **31** தொடக்கம் **35** வரையுள்ள வினாக்களுக்கு **F, G, H, I, J** ஆகிய ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.


F


G


H


I


J

**31.** **F** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள கலைப்படைப்பு .................................. நுட்பமுறைக்கேற்ப நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

**32.** **G** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள லயத்திற்கமைவான தூண்களுடன் கூடிய கற்களினால் அமைந்த மண்டபத்தைச் சுற்றி.................................. அமைக்கப்பட்டுள்ளது.

**33.** **H** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மரபுரீதியான சிங்கள அலங்கார அலகு .................................. அலங்கார வகைக்குரியது.

**34.** **I** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியக் கலைஞரான கே.கனகசபாபதியின் ஓவியம் .................................. ஊடகத்தினால் அமைந்த படைப்பாகும்.

**35.** **J** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியம் .................................. கலைஞனின் படைப்பாகும்.

- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வர்ண ஓவியத்தை இனங்கண்டு, அதன் கலைப் பண்புகளைப் பகுப்பாய்வு செய்யும் விதத்தில் **36** தொடக்கம் **40** வரையில் தரப்பட்டுள்ள உப தலைப்புகளுக்கமைவாக பொருளுள்ள **ஐந்து** வாக்கியங்கள் எழுதுக. (தனிச் சொல்லினால் விடையளித்தால் புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது**).

**36.** கலைஞன் :..............................................................................................

..............................................................................................

**37.** கருப்பொருள் :..............................................................................................

..............................................................................................

**38.** பாணி :..............................................................................................

..............................................................................................

**39.** ஒழுங்கமைப்பு :..............................................................................................

..............................................................................................

**40.** பொதுப் பூரணப்பாடு :..............................................................................................

..............................................................................................

❋ ❋ ❋

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

OL/2023(2024)/43-T-II

32633

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**43 T II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

චිත්‍ර II
சித்திரம் II
Art II

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- ※ உங்கள் சுட்டெண்ணை விடைத்தாளில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தெளிவாக எழுதுக.
- ※ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும்போது உங்கள் சித்திரம் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளுதல் உங்களுக்குப் பாதகமாக அமையலாம்.
- ※ நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், கெட்டிச்சாயம் (டெம்பரா), பஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக் கொள்ளாத எந்தவொரு வர்ண ஊடகத்தையும் பயன்படுத்த முடியும்.
- ※ பொருட்களின் தொகுதியை 73 cm உயரமுள்ள மட்டமான மேசையிலோ அல்லது பலகையிலோ வைக்கும்படி பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

### சுயாதீன ரேகைச் சித்திரமும் வர்ணச் சித்திர ஒழுங்கமைப்பும்

※ உங்களுக்கு முன்னாலுள்ள பொருட்கூட்டத்தை நன்றாக அவதானிக்குக.

1. பூர்வாங்க பரும்படிப் படத்தை முதலில் வரைக. இதற்காக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வெள்ளைநிற A4 பருமட்டத் தாளைப் பயன்படுத்துக.
2. பொருட்தொகுதி உங்களுக்குக் காட்சியளிக்கும் விதத்தில் வரைந்து வர்ணந்தீட்டுக. இதற்காக வழங்கப்பட்டுள்ள விசேட வரைதல் தாளைப் பயன்படுத்துக.

※ **இரண்டு வரைதல்களையும் ஒன்றாக இணைத்து பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்குக.**

※ உங்களது வரைதலை மதிப்பிடும்போது பின்வரும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படும் என்பதைக் கவனத்திற் கொள்க.

- **சுயாதீன ரேகைக் கற்றல்**

1. பருமட்டத் தாளிலுள்ள பூர்வாங்கப் பரும்படிப் படத்தில், உரிய ஊடகத்தைக் கையாளும் திறன்கள் *(05 புள்ளிகள்)*

- **வர்ணச் சித்திரம்**

2. தளத்துக்கு உகந்ததாகப் பொருட்தொகுதி கலைநுட்பத்துடன் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல் *(05 புள்ளிகள்)*
3. அளவிடைகள், தூரநோக்கு, முப்பரிமாண விளைவு பற்றிய விளக்கம் *(05 புள்ளிகள்)*
4. தரப்பட்டுள்ள பொருட்களின் வெளித்தோற்றப் பண்புகளை எடுத்துக்காட்டல் *(05 புள்ளிகள்)*
5. வர்ண ஊடகங்களைக் கையாளும் திறன் *(05 புள்ளிகள்)*
6. பொருத்தமான வர்ணப் பின்னணியும் ஒட்டுமொத்த பூரணப்பாடும் *(05 புள்ளிகள்)*

**மிக முக்கியம் :**

பொருட்தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையைப் பெரிய அளவில் வரையத் தேவையில்லை. பலகையின் அளவைப் பொருட்தொகுதிக்குப் பொருந்தும் வகையில் மாற்றி வரைவதற்கு உங்களுக்கு அனுமதி உண்டு.

※※※

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

OL/2023(2024)/43-T-III

32633

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**43 | T | III**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

චිත්‍ර III
சித்திரம் III
Art III

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ நீங்கள் **ஒரு** வர்ணச் சித்திரத்தை மாத்திரமே வரைய வேண்டும்.
- ✳ உங்கள் **சுட்டெண்ணையும்** உரிய **வினா இலக்கத்தையும்** விடைத்தாளில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தெளிவாக எழுதுக.
- ✳ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும்போது, உங்களது சித்திரம் நன்றாக உலர்ந்திருக்க வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளுதல் உங்களுக்குப் பாதகமாக அமையலாம்.
- ✳ வர்ணந் தீட்டுவதற்கு நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பெஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக் கொள்ளாத எவ்வகை வர்ண ஊடகத்தையும் பயன்படுத்தலாம்.
- ✳ வரைவதற்கு விசேட வரைதற் தாளும் A4 அளவிலான மேலதிக தாளும் திசுத்தாளும் வழங்கப்படும்.

பகுதிகள் **'அ'**, **'ஆ'**, **'இ'** ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியிலிருந்து **ஒரு வினாவை மாத்திரம்** தெரிவுசெய்க.

## பகுதி 'அ' - சித்திர ஒழுங்கமைப்பு

**1.** சமய வழிபாட்டுத்தலம் ஒன்றின் நிர்மாணப் பணிக்கு உடல் உழைப்பினால் பங்களிப்பைச் செய்யும் ஒரு குழுவினர்.

**2.** நடமாடும் பேக்கரி உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் வண்டி ஒன்றில் உணவுப் பொருட்களை வாங்கும் கூட்டத்தினர்.

**3.** சரணாலயமொன்றில் வன விலங்குகளைப் பார்வையிடுபவர்கள்.

**4.** உங்களைக் கவர்ந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வொன்று.

## பகுதி 'ஆ' - அலங்கார ஆக்கம்

**5.** மரபுரீதியான அலங்கார அலகுகள் மற்றும் நிறங்களைப் பயன்படுத்தி **6' × 8'** அடி அளவிலான மேசை விரிப்பொன்றை வரைந்து நிறந்தீட்டுக. (பரிமாணத்திற்கமைய தளத்திற்குப் பொருத்தமாக அமைக்குக.)

**6.** சாரியொன்றிற்கான கரையை விலங்குருவங்களைக் கொண்டு திட்டமிட்டு பொருத்தமான வகையில் நிறந்தீட்டுக.

**7.** வீட்டின் வராந்தாவில் வைப்பதற்குப் பொருத்தமான அலங்கார மட்பாண்டம் ஒன்றிற்கு ஆக்கபூர்வமான வடிவமொன்றைத் திட்டமிட்டு அதற்குப் பொருத்தமான அலங்காரங்களைப் பயன்படுத்தி நிறந்தீட்டுக.

## பகுதி 'இ' - கிறபிக் சித்திரம்

**8.** மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் பெறுமதியைக் காட்டும் சுவரொட்டியொன்றைத் திட்டமிட்டு நிறந்தீட்டுக.

**9.** 'பாரம்பரிய கிராமியக் கலைகள்' எனும் தலைப்பில் எழுதப்பட்ட நூலொன்றிற்குப் பொருத்தமான வர்ண மேலட்டை ஒன்றைத் (முதல் பக்கம் மட்டும்) திட்டமிட்டு நிறந்தீட்டுக.

**10.** 'தந்தைப் பாசம்' தொடர்பாக எழுதப்பட்ட கவிதைக்குப் பொருத்தமான விளக்கச் சித்திரம் ஒன்றைத் திட்டமிட்டு நிறந்தீட்டுக.

✳✳✳

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]



LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්
PADANAMA PUBLICATION
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න